செ. கு. எண்:144 நாள்:13.06.2013

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 13.6.2013

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், மதுரவாயல் அருகே 28.5.2013 அன்று ஓசூரிலிருந்து சென்னை வந்து கொண்டிருந்த அரசுப் பேருந்து நிலை தடுமாறி, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்காக அமைக்கப்பட்டுள்ள தூணின் மீது மோதியதில், தூத்துக்குடி மாவட்டம், மின்னல்புரம் கிராமத்தைச் சேர்ந்த பேருந்து நடத்துநர் திரு. கோமதி பிள்ளை தாயப்பன் என்பவர் சம்பவ இடத்திலும், பேருந்தில் பயணம் செய்த கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், மூக்கண்டபள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தசாமி என்பவரின் மனைவி காமாட்சி பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியிலும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த பேருந்து நடத்துநர் கோமதி பிள்ளை தாயப்பன் மற்றும் பயணி காமாட்சி ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பத்தில் உயிரிழந்த பேருந்து நடத்துநர் கோமதி பிள்ளை தாயப்பன் குடும்பத்திற்கு மூன்று லட்சம் ரூபாயும், பயணி காமாட்சி குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**